செ.வெ.எண்.291/2009/செமதொஅ நாள்: 10.09.2009

**இந்தியாவுக்கே வழிகாட்டக் கூடிய ஒப்பற்றத் தலைவராக முதல்வர் கலைஞர் திகழ்கிறார் - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பேச்சு.**

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் புதிய உழவர் சந்தை திறப்புவிழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ரூ.22.5 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள உழவர் சந்தையினை திறந்து வைத்து, 13 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளையும், 7 பயனாளிகளுக்கு ரூ.5.50 இலட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருட்களை வழங்கி விழா பேருரையாற்றினார்.

தமிழகத்தின் 145வது உழவர் சந்தையினை மதுராந்தகத்தில் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு இடைத்தரகர் இன்றி நல்ல விலை கிடைத்திடவும் நுகர்வோருக்கு தரமான, புதிய காய்கறிகளையும், பழங்களையும் குறைந்த விலையில் வாங்கி பயனடைய வேணடும் என்ற நோக்கத்தில் தான் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, பல்லாவரம், மேடவாக்கம், நங்கநல்லூர் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விரைவில் படப்பையில் உழவர் சந்தை அமைக்கப்பட உள்ளது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்ற பின், விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன் ரூ.7 ஆயிரம் கோடியினை அறவே தள்ளுபடி செய்தார். அதனை முன்மாதிரியாக கொண்டு இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையிலான மத்திய அரசு விவசாயிகள் பெற்ற கடன் ரூ.60 ஆயிரம் கோடியினை தள்ளுபடி செய்தது. முதல்வர் கலைஞர் அவர்கள் முதலில் இரண்டு ரூபாய்க்கு ஒருகிலோ அரிசி வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார். பின்னர் அதனையும் குறைந்து ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியினை வழங்கி வருகிறார். இதனை பார்த்துதான் மறைந்த ஆந்திர முதல்வர் டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகர ரெட்டி அவர்கள் ஆந்திராவில் இரண்டு ரூபாய்க்கு ஒருகிலோ அரிசியினை வழங்கினார். அனைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் இந்தியாவிற்கே வழிகாட்டக் கூடிய ஒப்பற்ற தலைவராக முதல்வர் கலைஞர் திகழ்கிறார்.

கடந்த 3 ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் உள்ள சாலைகள் சீரமைக்கப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. புதிய மேம்பாலங்கள் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டு வருகின்றன. நகர்புறத்தில் வாழும் மக்களைப் போல கிராம மக்களும் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் நிதிஒதுக்கீடு வழங்கப்பட்டு சிமெண்ட் சாலை, சோடியம் ஆவிவிளக்கு, நூலகம், குடிநீர்வசதி, பூங்கா, மயானம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகிறது. இதன்மூலம் கட்டமைப்பு பணிகளில் கிராம ஊராட்சிகள் தன்னிறைவு பெற்று வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு கோடி குடும்பங்கள் மருத்துவ காப்பீடு பெறும் வகையில் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டம் என்ற புதிய திட்டத்தினை கொண்டு வந்துள்ளார். இந்தியாவிலே தமிழகத்தில் தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் ஆண்டு வருமானம் ரூ.72 ஆயிரத்திற்கு குறைவாக உள்ள அனைவரும் உறுப்பினராக சேர்ந்து பயன் பெறலாம். இத்திட்டத்திற்கான பிரீமியத் தொகை ரூ.570 கோடியை தமிழக அரசே வழங்கி உள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மக்கள் இருதய நோய், சிறுநீரக நோய் போன்ற நோய்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் சேர்ந்து ரூ.1 லட்சம் வரை சிகிச்சை பெற்று பயன் பெறலாம். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் போன்ற ஏழை-எளிய மக்கள் வளமாக வாழ வேண்டும் என்பதற்காகவே இதுபோன்ற சிறப்பான திட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றுகிறார் முதல்வர் கலைஞர்.” என்று தெரிவித்தார்.

விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா,இ.ஆ.ப. அவர்கள் தலைமையுரையாற்றினார். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பெ.விஸ்வநாதன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, மதுராந்தகம் நகர்மன்றத் தலைவர் திருமதி.மலர்விழி குமார், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் செல்வி.சசிரேகா ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். முன்னதாக விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு.வி.எஸ்.ராமகிருஷ்ணன் வரவேற்றார். முடிவில் மாவட்ட வேளாண் விற்பனைக்குழு செயலாளர் திரு.எம்.திருமாவளவன் நன்றி கூறினார். மாவட்ட தொலைப்பேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.வி.ஸ்ரீதரன், வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளர் திரு.இரா.சுப்பிரமணியன், மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் துணைத்தலைவர் திரு.எஸ்.பன்னீர்செல்வம், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) திரு.செல்வப்பிள்ளை, வேளாண்மை துணை இயக்குநர்கள் திரு.கு.செல்வம். திரு.எஸ்.இராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.வேலாயுதம், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.இன்பநாதன், உதவி செயற்பொறியாளர் திரு.புனிதவேல், வேளாண் விற்பனைக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

செய்தி வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.